மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் முதலில் சொன்னேன். 18—11—76ல் கெஜட்டில் வந்திருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் வாங்கிப் படிக்கலாம். இல்லை என்றால் இன்னும் 2, 3 நாட்களுக்குள் எல்லா அங்கத்தினர்களுக்கும் அச்சிட்டுக் கொடுக்க வேண்டும் என்று விரும்பினால் அதைத் தருவதற்கு தயாராக இருக்கிறேன். அதைப் படிப்பது என்றால் நேரமாகும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே! அந்தத் தோட்டங்கள் குறைந்த ஏக்கரேஜ் இருந்தால் இந்த பிளாண்ட்டேஷன் லேபர் ஆக்ட் நாட் அப்ளிகபல் என்று இருக்கிறது. அதனால் ஏற்கனவே நிறைய ஏக்கரேஜ் வைத்திருப்பவர்கள் அதைக் கொஞ்சம் கொஞ்சம் ஆக பிரித்து பினாமியில் வைத்து இந்தச் சட்டத்தை மோசடி செய்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தை திருத்துவது அவசியம். இந்த மன்றத்தின் மூலமாக ஒரு தீர்மானத்தை போட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். பேரவைத் தலைவர் அவர்களே சட்டத்தைத் திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நாங்கள் அதற்காக எந்த எந்த தோட்டத்தை கொண்டு வந்து அமுல்படுத்த முடியும் என்பதற்காக ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். சி.ஐ.டி.யு.வைச் சேர்ந்த தொழிலாளர்கள் பிரதிநிதியும் கொண்ட அந்தக் குழு பரிந்துரை வழங்க பரிசீலனை செய்து சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம்.

திரு. துரை முத்துசாமி: ஆன் ஏ பாயின் ஆப் ஆர்டர் குறுகிய கால வினா என்று 1978–79, 1979–80ல் தமிழ்நாடு அரிசனங்களுக்காக வீடுகள் கட்டப்படும் திட்டத்தைப் பற்றி கேட்டிருந்தேன். அதை நீங்கள் சாதாரண கேள்வியாக எடுத்துக்கொண்டதாக கேள்விப்படுகிறேன்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பற்றி என்னிடம் கேளுங்கள். நான் பார்த்துச் சொல்கிறேன்.

## வடதலைக்குளத்தில் அரிசனங்களுக்கு வீடுகள்.

*வினா எண். 725—திரு. ஏ. இராமலிங்கம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர். கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம் வடதலைக்குளம் அரிசன காலனியில் 'தாட்கோ' மூலம் புதிய கல் வீடுகள் கட்ட அனுமதித்து கடந்த 20—10—76-ல் கடலூர் நெடுஞ்சாலை பணித்துறை மூலம் டெண்டர் விடப்பட்டு இது நாள் வரை வீடுகள் கட்டப் பெறவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

**(ஆ) ஆம் எனில் அதன்மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?**

1979 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம் வடதலைக்குளம் அரிசனக் காலனியில் தாட்கோ மூலம் புதிய வீடுகள் கட்ட 24—10—75-ல் கடலூர் நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித்துறை கோட்டப் பொறியாளர் அவர்களால் டெண்டர் விடப்பட்டு இதுவரை அங்கு வீடுகள் கட்டப் பெற வில்லை.

(ஆ) வடதலைக்குளம் அரிசனக் காலனியில் வீடுகள் கட்டுவது தக்க தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் வீடுகள் கட்டப்படவில்லை என்று சொன்னார்கள். உண்மையிலே நான் வருத்தப்படுகிறேன். அந்தத் திட்டத்தை அந்த நபர்களிடமே ஒப்படைத்தால், பணத்தைத் தந்தால், அவர்களே சொந்தமாக வீடுகளை கட்டிக் கொள்வார்கள். அதைப் பரிசீலிப்பார்களா?

அப்படிச் செய்தால் அவர்கள் வீடுகள் ஒழுங்காகக் கட்ட முடியும். குடியிருப்புகளை காண்ட்ராக்டர் கட்டுவது என்றால் அது ஒழுங்காக இருக்காது.

(முற்பகல் 9–20.)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த வீடுகட்டும் திட்டம் 1974–76ஆம் ஆண்டுகளில் டெண்டர் விடப்பட்டது. இப்போது அதற்காக உறுப்பினர் அவர்கள் வருத்தப்பட்டு பயன் இல்லை. அப்போது மொத்தமாக ஒதுக்கியதில் அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கியிருந்ததை மாற்றி அமைத்ததின் காரணத்தினால்தான் எண்ணிக்கை குறைந்ததே தவிர வேறு காரணம் இல்லை.

திரு. சி. கோவிந்தராசன்: கேட்கப்பட்டிருக்கிற கேள்வி டெண்டர்கள் விடப்பட்டதற்குப் பிறகு ஏன் கட்டப்படவில்லை என்பது தான். அதற்குரிய காரணத்தை அறிந்து கொள்வதற்குத்தான் இந்த கேள்வி போடப்பட்டிருக்கிறது. 1974–76 ஆம் ஆண்டுகளில் டெண்டர்கள் போடப்பட்டும் இன்னும் வீடுகள் கட்டப்படவில்லை என்று அமைச்சர் சொல்லுகிறார்கள். மாற்றி அமைத்ததால்தான் வேறு விதமாக போய்விட்டது என்றும் சொல்லுகிறார்கள். அப்படியானால் டெண்டர்கள் போடப்பட்டதின் அடிப்படையில் வீடுகளை கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1974–76ஆம் ஆண்டுகளில் 35,117 வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த 35,117 வீடுகளில் தென்னார்காடு

மாவட்டத்திற்கு 5,102 வீடுகள் ஒதுக்கப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் வடதலைக்குளம் இதில் இடம் பெறாததற்கு காரணம், பின்னால் 31—12—75-ல் 30 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கே அரசு ஆணையிட்டது. அதில் தென்னாற்காடு மாவட்டத்திற்கு 3,121 வீடுகள் மட்டும் தான் கிடைத்தது. அதனால் தான் இந்த ஊரில் வீடு கட்டப்படவில்லையே தவிர வேறு எந்தவிதமான காரணமும் இல்லை.

திரு. துரை முத்துசாமி: இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டெண்டர்கள் விடப்பட்டதாக சொன்னார்கள். இந்த டெண்டர்கள் யார் யாருக்கு விடப்பட்டிருக்கிறது, அந்த விவரம் என்ன? இந்த டெண்டர்களுக்கு இன்னும் உயிர் இருக்கிறதா? அதற்குப் பிறகு 76-ல் விட்ட டெண்டர்களுக்கு இப்போது ஃபாலோ அப் ஆக்ஷன் இருக்கிறதா? மேலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அந்த டெண்டர்களுக்கு இன்னும் உயிர் இருக்கிறதா என்று கேட்டார்கள். அது செத்து விட்டது என்பது தான் இங்கு இருக்கிற விவரங்களிலிருந்து தெரிகிறது. ஒதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதினால்தான் வடதலைக்குளம் இடம் பெறவில்லை. வேறு எந்தக் காரணமும் இல்லை.

## அணைக்கரைப் பட்டியில் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் ஆக்கிரமிப்பு.

*வினா எண். 726—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வ. புதுப்பட்டி பஞ்சாயத்தில் உள்ள அணைக்கரை பட்டி கிராமத்தில் அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட சுடுகாட்டு நிலத்தை தனியார் ஆக்கிரமித்து விவசாயம் செய்வது அரசுக்குதெரியுமா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், வ. புதுப்பட்டி ஊராட்சியில் உள்ள அணைக்கரைப்பட்டியில் அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட சுடுகாட்டு நிலத்தை திரு. **வடக்குத்திய தேவர் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.**